செய்தி வெளியீடு எண் : 076 நாள் : 11.01.2024

## செய்தி வெளியீடு

### மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 நடத்துவது தொடர்பான முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம்:

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 நடத்துவதற்காக முன்னேற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் நிர்வாகக் குழுவினரிடம் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார். தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களில் 2024 ஜனவரி 19 முதல் 31 வரை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் மொத்தம் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து, 18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் சுமார் 6000–க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர் வீராங்கனைகளும் 1600–க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களும் பங்கேற்க உள்ளனர். மேலும், 1000–க்கும் மேற்பட்ட நடுவர்கள் மற்றும் 1200–க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இந்த ஆண்டு 27 பிரிவுகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் டெமோ விளையாட்டுகளில் (Demo Sports) இடம்பெறுகிறது.

போட்டி நடைபெறும் இடங்கள் & அட்டவணை, உள்கட்டமைப்பு நிலை, வரவேற்பு/நெறிமுறை, போக்குவரத்து, துவக்க & நிறைவு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நகரங்கள், குடிநீர் வழங்கல் & சுகாதார வசதி, போட்டி நடைபெறும் நாளுக்கான நிகழ்வு மேலாண்மை, ஊடகம் & பத்திரிகை, விளம்பரப்படுத்துதல், போட்டி நடத்தும் மாநிலம்/மாவட்டத்தை முடுக்கிவிடுதல், பாதுகாப்பு ஏற்பாடுகள், பரிசு விநியோகம், மருத்துவச் சேவைகள், தங்குமிடம், சுகாதாரம் & உணவு வழங்குதல், விளையாட்டு மைதானங்களுக்கான நிர்வாகக் கட்டமைப்பு, மேடை ஏற்பாடுகள், மின்சார விநியோக வசதி, முக்கியச் சாலைகள் & சாலைத் தளவாடங்கள், இந்திய அரசு/மாநில அரசு ஒருங்கிணைப்பு, மாநில ஒருங்கிணைப்பு & கட்டுப்பாட்டு அறை, அங்கீகார அட்டைகள், தொழில்நுட்பம் & தகவல் தொழில்நுட்பச் சேவைகள், பார்வையாளர்களுக்கான அடிப்படை வசதிகள், பண்பாட்டுப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., இந்திய விளையாட்டு ஆணையத்தின் துணை இயக்குநர் ஏக்தா விஷ்னோய், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசுச் செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in